மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்துள்ள முன்னுரையைத் தொடர்ந்து, நாளைய தினம் விவாதம் இந்த மானியக் கோரிக்கைகள்மீது தொடரும். திரு. நா. சா. பழனிசாமி நாளைய தினம் முதலிலே பேசுவார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31—3—1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

128. 25—3—1988-ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறையின் அறிவிக்கை எண் II (2)/ஏஜி/2939/83-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 13—10—1992 ஆம் நாளிட்ட 622-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

129. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30—10—1990ஆம் நாளிட்ட 971-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

130. திரு. டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவராக நியமித்ததை குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 31-7-1992-ஆம் நாளிட்ட 490-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1993 மார்ச் 30]

131. திரு. கே. சந்திரசூடன், இ.ஆ.ப., அவர்களை குடிசைமாற்று வாரியத் தலைவராக நியமித்ததைக் குறித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 16-5-1991-ஆம் நாளிட்ட 826-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

132. 1990—91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

133. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

134. 1991—92-ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

96. கோரிக்கை எண் 10—பால்பண்ணை வளர்ச்சித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண் 23—கூட்டுறவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993—94. (தமிழ், ஆங்கிலம்).

98. கோரிக்கை எண் 34—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94. (தமிழ், ஆங்கிலம்).